A/L ZOOLOGY
திரு. K. சிவபாதம்
B.Sc, Hons
(நீண்ட இடைவெளிக்குப் பின்)
மீண்டும் ஆரம்பம்
11 - 1 - 1986
Bond Institutes
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/=


A/L MATHS
திரு. வேலாயுதம் B.Sc.
Pure-Maths—நேர்கோடு
App. Maths—காவி
ஆரம்பம்:
6 - 1 - 1986
Bond Institutes
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு மார்கழி மீ 21 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 23 (05-01-1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-40

★ கண்காணிப்புக் குழு கூடவிருந்த வேளையில்....

# யாழ்நகரில் சூடு; குண்டு வெடிப்பு!

# முஸ்லிம் பெண் உட்பட 4 பேர் பலி!!



காயமடைந்தவர்களில் மூவர்

## 14 பேர் படுகாயம்; வானத்திலிருந்தும் வேட்டுகள் முழங்கின

— அலுவலகச் செய்தியாளர்: வனிதராஜன் —

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ்ப்பாண நகரில் நேற்று காலை 7-30 மணி முதல் 10-30 மணிவரை சரமாரியான துப்பாக்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டன; குண்டு வெடிப்புகளும் இடம் பெற்றன. வானத்திலிருந்தும் துப்பாக்கி வேட்டுகள் முழங்கின.

கண்காணிப்புக் குழு விசாரணை நடத்த இருந்த வேளை இந்தக் களேபரம் இடம் பெற்றது.

இந்த நேரந்தில் யாழ். நகரம் கொலைக் களமாக மாறியது. 4 பேர் மடிந்தனர். 14 பேர் படுகாயம் அடைந்தனர்.

துப்பாக்கிச் சூடு தாக்கி ஒரு வயோதிப முஸ்லிம் பெண் உட்பட நான்கு பேர் மரணம் அடைந்தனர்.

14பேர் காயம் அடைந்தனர்.

இறந்தவர்கள் சகலரும் அடையாளம் காணப்பட்டனர்.

இது பற்றிக் கூறப்படுவதாவது;

காலை 7.45 மணி அளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று ஹோட்டல் அசோக்கை சுற்றி வட்டமிடத் தொடங்கியது.

அதைத் தொடர்ந்து நகரில் குண்டுகள் வெடிக்கத் தொடங்கின.

கோட்டைக்குள் இருந்து ஆயுதப்படையினர் ஹோட்டல் அசோக்கை நோக்கி வந்தனர்.

அதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சமர் ஆரம்பித்தது எனலாம்.

கவச வாகனங்களில் இருந்தும் சூடுகள் வர ஆரம்பித்தன.

### கோட்டைக்குத் திரும்பினர்

துப்பாக்கிச் சமர் தீவிரமாகவே, ஆயுதப் படையினர் கோட்டைக்குத் திரும்பினர்.

பின்னர் கோட்டையில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் வரத் தொடங்கின.

ஹெலிக்கொப்டரில் இருந்தும் சூடுகள் தரையை நோக்கி வந்தன.

கீழ் இருந்தும் வேட்டுக்கள் தீர்க்கப்படவே, தாழப்பறந்த ஹெலிக்கொப்டர் உயர எழும்பியது.

இந்த இருபக்கச் சமர், காலை 10.30 மணி வரை நீடித்தது.

### மக்கள் சிதறி ஓட்டம்

துப்பாக்கி வேட்டுக்கள் நாலா பக்கங்களில் இருந்தும் தீர்க்கப்

(4-ஆம் பக்கம் பார்க்க)

ஒன்றரை மணிநேரம்

## செத்தவன்போல வானில் கிடந்தேன்!

நல்லூர், ஜன. 5

வானில் வந்துகொண்டிருந்த என்னை அசோக் ஹோட்டலில் நின்ற சீருடையினர் மறித்தனர்.

அப்பொழுது இரண்டு பக்கங்களில் இருந்தும் துப்பாக்கி வெடிகள் கேட்டன.

எனது வான் கண்ணாடிகள் துப்பாக்கிச்சூட்டினால் நொருங்கி எனது கையில் பாய்ந்தன. இரத்தம் கசிந்தது.

மணிக்கூட்டுக் கோபுரத்துக்கருகே துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான வான்சாரதியான நாவாந்துறையைச் சேர்ந்த த. செபஸ்தியாம்பிள்ளை (வயது 45) இப்படித் தெரிவித்தார்.

தமக்கு நேர்ந்த அனுபவம்பற்றி மேலும் அவர் தெரிவிக்கையில்:

நேற்றுக் காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் நோக்கி வானைச் செலுத்திவந்தேன்.

மணிக்கூட்டுக் கோபுரத்தை எனது வான் அடைந்ததும் அசோக் ஹோட்டல், நிம்மர் மண்டபம் ஆகியவற்றிலிருந்த சீருடையினர் வானை நிறுத்தும்படி என்னைப் பணித்தனர்.

வானை அந்த இடத்திலேயே நிறுத்தினேன். துப்பாக்கி வெடிப்புகள் தொடர்ந்தன.

எனது வான் கண்ணாடி சிதறியது. நான் செத்தவன்போல் வானுள் படுத்துக்கொண்டேன்.

சுமார் ஒன்றரை மணித்தியாலமாக வானினுள் படுத்திருந்த நான் வெடிச்சத்தங்கள் ஓய்ந்ததும் எழுந்து வெளியே வந்தேன்.

குண்டு வெடிப்பால் சிதறிய கண்ணாடித் துண்டுகள் எனது கையினுள் புகுந்துவிட்டன.

வானின் கண்ணாடிகள், ரயர்கள் எல்லாவற்றையும் குண்டுகள் துளைத்திருந்தன.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஹெலிக்கொப்டர் சூடு இடுப்பைத் தாக்கியது!

நல்லூர், ஜன, 5

சூட்டுச் சத்தங்கள் கேட்கவே என்னவென்று பார்க்க வெளியில் வந்தேன்.

அப்போது மேலே ஹெலிக்கொப்டர் பறந்து கொண்டிருந்தது.

திடீரென்று மேலிருந்து மர இலைகளுக்கு ஊடாக ஏதோ ஒருபொருள் எனது இடுப்பைத் தாக்கியது.

நான் அப்படியே அந்த இடத்தில் இருந்து விட்டேன்.

வண்ணார்பண்ணையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நா. கணபதிப்பிள்ளை (25 வயது) இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தச்சுவேலை செய்பவர். இவரின் இடுப்பினுள் குண்டு ஒன்று புகுந்துள்ளது.

## சுள்ளிட்டமாதிரி இருந்தது தொட்டுப் பார்க்க இரத்தம்

நல்லூர், ஜன. 5

விஞத்தாள் திருத்துவதற்காக எனது அக்காவை வேம்படி மகளிர் கல்லூரியில் விட்டு விட்டு வந்தேன்.

யாழ்ப்பாணம் சோபிகா ஹோட்டல் அருகில் நான் வந்து கொண்டிருந்தேன்.

அப்பொழுது எனது கையில் சுள்ளிட்டமாதிரி இருந்தது.

கையால் தொட்டுப் பார்த்த போது இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

பின்னர் அங்கு நின்ற இளைஞர்கள் என்னை வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தையல் வேலை செய்யும் ஏ. நிசார் (18 வயது) என்பவர் தெரிவித்தார்.

## டாக்டர்கள் தாதிமார் ஊழியர் சுறுசுறுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள், தாதிகள் மற்றும் ஊழியர்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்காளானவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் சுறுசுறுப்புடனும் அக்கறையுடனும் ஈடுபட்டனர்.

இது மக்களின் மனதில் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டது.

படுகாயங்களுக்கு ஆளானவர்களுக்கு சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் பொன்னம்பலம் தலைமையில் டாக்டர்கள் தீவிரமாகப்பணி புரிந்தனர்.

## மக்களின் பதற்றமும் அவர்கள் பட்டபாடும்

யாழ்ப்பாணம், ஜன. 5

நேற்றுக்காலை நடந்த அசம்பாவிதங்களைத் தொடர்ந்து, யாழ்நகர் வெறிச்சோடியது.

பஸ் சேவைகள் ஸ்தம்பித்தன. கடைகள் இழுத்து மூடப்பட்டன.

டியூட்டறிகள் உடனே மூடப்பட்டன, மாணவ மாணவிகள் அகப்பட்டதில் ஏறிக்கொண்டு வீடு திரும்பினர்.

பஸ் நிலையம் வரை வாகனங்கள் செல்லாததால் ஒவ்வொரு திசையிலும் ஒவ்வொரு முக்கிய சந்திகளில் அவை நிறுத்தப்பட்டன. அதனால் ஆஸ்பத்திரி, ரயில் நிலையம் ஆகியவற்றுக்கு வந்தவர்கள் ஓட்டமும் நடையுமாக தாம் சேர வேண்டிய இடங்களை அடைந்தனர்.

நண்பகலின் பின்னர் சில மினிபஸ்களும் அரச பஸ்களும் சேவையில் ஈடுபட்டதைக் காணக் கூடியதாக இருந்தது.

பிற்பகலிலும் சன நடமாட்டம் மிகமிகக் குறைவாக இருந்தது.

### சுபநேரம்

05 - 01 - 1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்

9.31 முதல் 11-01 வரை

ராகு காலம்

5.01 முதல் 6-.31வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

நவமி மு. ப. 7.38 வரை

## யாழ் ஆஸ்பத்திரி இரத்தம் முழுதும் பாவிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன 5

யாழ் ஆஸ்பத்திரி இரத்தவங்கியில் இருந்த இரத்தம் முழுவதும் நேற்று பாவிக்கப்பட்டது.

நேற்று இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் காயமடைந்தவர்களுக்கு வழங்கப்படுவதற்கே இந்த இரத்தம் பயன்படுத்தப்பட்டது.

இன்று யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்தம் இல்லை.

ஆகவே பொதுமக்கள் தாராளமாக இரத்த தானம் செய்யும்படி ஆஸ்பத்திரி அதிகாரிகள் அவசர வேண்டுகோள் விடுத்தனர்.

நேற்று 15 பொதுமக்கள் இரத்த தானம் செய்தனர்.

## வானத் தாக்குதலை நேரில் கண்ட கண்காணிப்புக் குழு உறுப்பினர்

### பேராசிரியர் சிவதம்பி அருந்தப்பு

யாழ்ப்பாணம், டிச. 5

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த சம்பவத்தில், ஆயுதப் படையினர் ஹெலிக்கொப்டரிலிருந்து சுட்டதை நான் நேரில் கண்டேன். குண்டுகள் எனக்கு மிகச் சமீபமாக வந்து விழுந்தன. நானும், எனது நண்பர் ஒருவரும் மயிரிழையில் தப்பினோம்.

வானத்திலிருந்து தாக்குவதை உடன் நிறுத்த வேண்டும். அதனால் அப்பாவி மக்களே பாதிப்படைகிறார்கள்—என்று வடபகுதி இணைப்பதிகாரிக்குத் தெரிவித்தேன்.


இவ்வாறு கண்காணிப்புக் குழு உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் கா. சிவதம்பி உதயனுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

ஹெலிக்கொப்டரிலிருந்து தாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டித்த பேராசிரியர் சிவதம்பி தமது அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது;—

நேற்றுக்காலை நடக்கவிருந்த கண்காணிப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஹோட்டல் அசோக் பக்கமாக வந்தேன். அப்போது மக்கள் பதற்றத்துடன் சிதறி ஓடுவதையும், துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு குண்டுகள் வந்து விழுவதையும் காண முடிந்தது.

வானத்திலிருந்து சுடப்படுவதை நிறுத்துமாறு கோட்டை இராணுவப் பொறுப்பதிகாரியைத் தொலைபேசி மூலம்

(4-ஆம் பக்கம் பார்க்க)



இறந்தவர்களில் இருவர்

## அரசாங்கத்தின் அறிக்கை இது

யாழ்ப்பாணம், ஜன. 5

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு நேற்று அதன் விசாரணைகளை நடத்தமுடியாமற்போனதற்கு தீவிரவாதிகளின் நடவடிக்கையே காரணமாகும்.

இப்படி அறிவித்திருக்கிறது அரசாங்கம்.

யாழ்நகரில் நேற்று நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கம் அறிக்கை ஒன்றை விடுத்தது. அந்த அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;—

அசோக் ஹோட்டலில் சாட்சியங்களை பதிவு செய்வதற்கு குழு ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

ஹோட்டலுக்கு அரு

(4-ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்திமுரளி



யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலை இருக்கிற ''வசதிகளுக்கு'' அந்தச் சீமான்கள் டொக்டர்மார், பணியாட்கள் கவனம் எடுத்து வேலை செய்யாட்டால், அங்கை போறவை எல்லாம் எமலோகத்தை எட்டிப் பார்க்க வேண்டித்தான் வரும்.

நிலைமை சீரானால்

## இன்று விசாரணையாம்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ்ப்பாணத்தில் இன்று நிலைமை சீரடையுமானால் பிரஜைகள்குழு பிரதிநிதிகளையும், ஏனைய சாட்சிகளையும் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு, சந்திக்கும்.

கண்காணிப்புக் குழுவின் நேற்றைய விசாரணைகள் ரத்துச்செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கம் விடுத்த அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று நடைபெற்ற சம்பவங்கள் பற்றியும் அப்போது விசாரணை செய்யப்படும் என அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

## துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்தோர்

யாழ்ப்பாணம், ஜன. 5

காயம் அடைந்தவர்களின் விவரங்கள் வருமாறு;

1. கமால்தீன் மிதிராஜ், வயது 19. யாழ்நகர் ஆஸாத் வீதி வாசி. கடைத்தெருவில் தையல் தொழில் செய்பவர். வாய் பேசாதவர்.

ஆஸ்பத்திரி வீதியில் வைத்து அவருக்கு வலது தொடையின் முன் பக்கமும் பின் பக்கமும் துப்பாக்கிக் குண்டு தாக்கியது.

2. தம்பையா விமலேந்திரராஜா வயது 15, ஆஸ்பத்திரி வீதிச் சந்திக் கடையில் வேலை செய்பவர். மாதகல் மேற்கு வாசி.

மாதகலில் இருந்து பஸ்ஸில் வந்து யாழ். பஸ் நிலையத்தில் இறங்கிக் கடைக்குச் செல்கையில் நெஞ்சில் துப்பாக்

(4-ஆம் பக்கம் பார்க்க)

துப்பாக்கி குண்டுகளை தடுக்க

## முனீஸ்வரன் வீதிக்கு குறுக்கே பஸ் நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 5

நண்பகலின் பின்னர் யாழ்நகரில் முனீஸ்வரன் வீதி தடை செய்யப்பட்டது. வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வீதிக்குக் குறுக்கே நிறுத்தப்பட்டதால் வீதிப் போக்குவரத்துத் தடைப்பட்டது.

அந்த வீதி ஊடாகத்தான் துப்பாக்கிக் குண்டுகள் வருகின்றன என்றும் அதைத் தடுத்து நிறுத்தவே பஸ் நிறுத்தப்பட்டது என்றும் கூறப்

(4-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## மணமகளே! மருமகளே! வா! வா!!

திருமணத்துக்குப் பின் நடிக்கப் போவதில்லை என்று அறிவித்திருந்தார் பூர்ணிமா. 'உங்கள் வீட்டுப் பிள்ளை' படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக நடித்ததே இவரின் கடைசிப் படமாம்.

வாஹினி ஸ்ருடியோவில் படப்பிடிப்பு அரங்குனுள் நுழைந்தார் பூர்ணிமா. உடனே, 'மணமகளே மருமகளே வா வா' என்ற பாடலைப் பாடி அவரை வரவேற்றார்கள்.

பூர்ணிமா நாடோடிப் பெண் உடையில் இருந்தார். அவருடன் கூடவந்த அவரின் தாய் முகத்தில் மகிழ்ச்சி தென்பட்டாலும் மகளைப் பிரிகிறோமே என்ற வருத்தமும் இழையோடியிருந்தது

பூர்ணிமா அடிக்கடி வாசல் பக்கம் பார்த்த வண்ணமாக இருந்தார். சரியாக ஏழு மணிக்கு பாக்யராஜ் வந்தபின் முகம் மலர்ந்தது. 'படப்பிடிப்பு முடியவில்லையா?' என்று டைரக்டர் சி. வி. ராஜேந்திரனிடம் விசாரித்து விட்டு எட்டத்தில போய் உட்கார்ந்து கொண்டார் பாக்யராஜ்.

''நான் அருகிலிருந்தால் அதுசிரமப்படும். பிலிம் வேஸ்டாகுதுன்னு நான் சத்தம் போட்டா அழுதுவிடும். முந்தாநேடிச்சின் போது ஒரு மணி நேரம் கால்ஷீட் வாங்கி, படப்பிடிப்பு நடந்த போது இப்படித்தான் நான் ஏதோ சொல்ல உடனே அழுதிடிச்சு'' என்றார்.

சி. வி. ராஜேந்திரன் கடைசியாப் பூர்ணிமாவைத் தனியாக நிற்க வைத்து' எதற்கும் உபயோகப் படக்கூடியதாகச் சில 'ஷாட்' கள் எடுத்துக் கொண்டார்.

அழுவது, சிரிப்பது, ஆச்சரியமாகப் பார்ப்பது என்று பத்து நிமிடம் தொடர்ந்து படமாக்கினார். பின்பு பிரபு ஒரு ரோஜா மாலை எடுத்து வந்து பாக்யராஜிடம் தர அதை அவர் பூர்ணிமாவுக்கு அணிவித்தார்.

பூர்ணிமாவும் மாலை மாற்ற வேண்டும் என்று கண்டிப்பாக அனைவரும் தெரிவிக்க கன்னம் சிவக்க, வெட்கத்துடன் புன்முறுவல் பூத்தவண்ணம் மாலையைப் பாக்யராஜ் கழுத்தில் திரும்பப் போட்டார்பூர்ணிமா

கேமராவையும் படப்பிடிப்பு நடந்த தரையையும் தொட்டுக் கும்பிட்ட பூர்ணிமா விட்டுக்குப் புறப்பட்டார்.

தினசரி சினிமா

# லிபியாவைத் தாக்க அமெரிக்கா தீவிரம்

## ஈரான் ஆத்திரம்

தெஹ்ரான், ஜன 4

லிபியாவின் மீது அமெரிக்காவும் இஸ்ரவேலும் தாக்குதல்களை நடத்துமானால் லிபியாவுக்கு நிபந்தனையற்ற உதவிகளை ஈரான் வழங்கும்.

இவ்வாறு ஈரானின் வெளிநாட்டமைச்சர் லிபிய தூதுவரிடம் தெரிவித்துள்ளார்

லிபியா விடயத்தில் அமெரிக்காவினதும் இஸ்ரவேலினதும் போக்குகளைக் கண்டித்து அவர் மேலும் கருத்து வெளியிட்டார்.

லிபியாவைத் தாக்குவதற்கு அமெரிக்காவும் இஸ்ரவேலும் திட்டமிட்டுள்ளன.

அமெரிக்கா இந்தப் பிராந்தியத்தில் கெடுபிடி நிலைகளை உருவாக்கக் கங்கணம் கட்டிக் கொண்டுள்ளது விமானத் தளத் தாக்குதல் விவகாரத்தைப் பயன்படுத்தி அது தனது திட்டங்களை இங்கு செயல்படுத்தப் பார்க்கிறது.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு லிபியா காரணமாக இருப்பதாகவும் இப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பலஸ்தீன கெரில்லா குழுவுக்கு லிபியா புகலிடம் கொடுத்து வருவதற்கு எதிராக தமக்கு ஆதரவு தருமாறு அமெரிக்கா கேட்டிருக்கிறது.

பயங்கரவாதத்துக்கெதிரான போர் என்ற பாசாங்கில் இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்க இஸ்ரவேல் நடவடிக்கைகளின் இரகசியங்களை இது இனங்காட்டுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்திய

## பொலீஸ், ராணுவத்தில் பெண்கள் சேர வாய்ப்பு

### ராஜீவ் அறிவிப்பு

புதுடில்லி ஜன,4

'பொலீஸ் இராணுவப் பிரிவுகளில் பெண்களையும் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.'

மேற்கண்டவாறு பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூரதர்ஷன், தொலைக்காட்சியில் பெண்கள் குழுவொன்றுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலீஸ் மற்றும் அவசிய கால தேவைக்கான இராணுவப் பிரிவுகளிலும் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

ராஜீவைப் பேட்டி கண்ட பெண்கள்குழு பெண்களுக்கான வாய்ப்புகள் தொடர்பாக எழுப்பியகேள்விகளுக்கு பிரதமர் பதிலளித்தார்.

## வெளி உலகில்

# நம் இசை தமிழிசை கர்நாடகம் அல்ல

### பொள்ளாச்சி மகாலிங்கம்

சென்னை, ஜன.4

'கர்நாடக சங்கீதம்' என்று அழைப்பதை நிறுத்த வேண்டும்.

'தமிழிசை' என்றே அழைக்க வேண்டும்.

பிரபல தொழில் அதிபரும் தமிழ் அறிஞருமான பொள்ளாச்சி என். மகாலிங்கம் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியின் 53 ஆவதுஆண்டு இசை விழாவை திரு மகாலிங்கம் தொடக்கி வைத்துப் பேசுகையில் மேலும் சொன்னதாவது;

தமிழர்கள் மொழி, கலை, சமயம் மூலம் இசையை வளர்த்தார்கள்.

இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம், தமிழ் இசை பற்றிய முழு ஆய்வு ஒன்றைத் தந்தது.

தமிழ் இசை பற்றிய ஆதாரபூர்வமான நூல் ஆபிரகாம் பண்டிதர் எழுதிய 'கர்ணாமிர்த சாகரம்'.

இந்த நூல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாதது கவலை தருகின்றது.

11 ஆம் நூற்றாண்டில் சாளுக்கிய மன்னர் சோமேஸ்வர வர்மா காலத்தில் தான் 'கர்நாடக சங்கீதம்' என்ற சொற்றொடர் உபயோகத்துக்கு வந்தது.

அந்தச் சொற்றொடர் ஏன் இன்றும் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்பது ஆச்சரியத்தையே தருகின்றது.

பண்டைக்காலத்தில் தமிழிசையை வளர்த்தவர்கள் அகஸ்தியர், இராவணன், நாரதர் ஆவர்.

தமிழிசையின் பாரம்பரியம் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியது.

கருத்துக்களை விளங்கிக் கொள்ளாமல் ஏனைய மொழிகளில் உள்ள கீர்த்தனைகளைப் பாடுவது இயலுமான வரை தவிர்க்கப்படவேண்டும்.

அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர் ஆகிய நாயன்மார்கள் தமிழிசைக்கு

(3-ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்க நடவடிக்கைக்கு

## பென்டகன் இராணுவ பிரிவு திட்டங்கள் தயாரிக்கிறது

வாஷிங்டன், ஜன. 4

அமெரிக்க பாதுகாப்பு இலாகா பென்டகன் இராணுவப் பிரிவைக் கொண்டு புதிய சில திட்டங்களைத் தயாரிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரோம், வியன்னா விமானத்தளத் தாக்குதல்களுக்கெதிரான நடவடிக்கைகளுக்கான திட்டங்களே அவை.

ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்குரிய வகையில் திட்டங்களைத் தயாரிக்குமாறு வெள்ளை மாளிகை கேட்டிருந்தது.

தகுந்த திட்டங்களை பென்டகன் இராணுவப் பிரிவு தீவிரமாக தயாரித்துக் கொண்டிருப்பதாக நிர்வாகபீடம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டங்களில் வெளிப்படையாகத் தெரியாதவகையில் லிபியாவைத் தாக்குவதற்கான விடயங்களும் சேர்க்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

ரோம், வியன்னா தாக்குதல்களுக்கு பொறுப்பான அபு இதால் குழுவுக்கு லிபியா எல்லா ஆதரவும் வழங்கி வருவதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.

நேரடியாகவோ, மறைமுகமாகவோ தான் இந்தத் தாக்குதல்களுக்கு ஒத்துழைக்கவில்லை என லிபியா உறுதியாக மறுத்து வருகிறது.

அமெரிக்கா இந்தப் பிராந்தியத்தில் இராணுவ நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளுமா எனக் கேட்கப்பட்டது.

இதற்கான திட்டங்கள் எதுவும் தயாரிக்கப்படவில்லை என அதிகாரிகள் கூறியதாகச் செய்திகள் கூறின.

அமெரிக்க இராஜாங்க அமைச்சு அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றில்,

லிபியாவுக்கெதிரான சர்வதேச நடவடிக்கைகளில் வாஷிங்டனுடன் ஒத்துழைக்குமாறும், லிபியாவுக்கெதிரான தடை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தலைவர் மகர்னில் கடாபியை உலகஅரங்கில் தனிமைப்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.

தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்பாக பென்டகன் தயாரித்த திட்டங்கள் ஏற்கனவே வெள்ளை மாளிகைக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டுமென தகவலறியும் வட்டாரங்கள் தெரிவித்தன.

### ஸ்பெயின் இஸ்ரவேல் புதிய உறவு

ஸ்பெயின், ஜன 4

இஸ்ரவேலுடன் ராஜரீக உறவுகளை வைத்துக் கொள்ள ஸ்பெயின் முன்வந்துள்ளது.

ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் உறுப்பினராகவும் ஸ்பெயின் சேர்ந்துள்ளது

ஐரோப்பிய நாடுகளில் இஸ்ரவேலுடன் ராஜரீகத் தொடர்பு எதுவும் வைத்துக் கொள்ளாத நாடாக இதுவரை ஸ்பெயின் இருந்தது.

கலாசார உடன்படிக்கை

## அமெரிகக ரஷ்ய உறவை சீராக்க மேலும் உதவும்

### சோவியத் கலாசார அமைச்சர் நம்பிக்கை

மாஸ்கோ, ஜன. 4

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான கலாசார உடன்படிக்கை ஒன்று அமுலுக்கு வந்துள்ளது.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு இரு நாடுகளுக்கு இடையே கலாசார உறவுகள் சீராக இந்த உடன்படிக்கை உதவும் என்று, ரஷ்ய கலாசார அமைச்சர் திரு. ஜவஹேவ் மாஸ்கோவில் வைத்துத் தெரிவித்தார். ஜெனிவா உச்சி மாநாட்டைத் தொடர்ந்து தான் கலாசார உடன்படிக்கை கையெழுத்தானது.

டமாஸ்கஸ்ஸில்

## அமீன் ஜமாயல் ஆசாத்துடன் பேச்சு

பெய்ரூத், ஜன. 4

சிரிய அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக லெபனான் ஜனாதிபதி அமீன் ஜமாயல் டமாஸ்கஸ் சென்று உள்ளார்.

பத்தாண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சிகளில் சிரிய அதிபர் ஆசாத்துடன் அவர் பேச்சுக்களை நடத்தி வருகிறார்.

சென்ற வார முடிவில் மக்கள் படைகளுக்கிடையில் உடன்பாடொன்று காணப்பட்டது.

இந்த உடன்பாட்டை அமுல் படுத்துவதற்கான நடைமுறை சாத்தியக் கூறுகளை இருவரும் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

படிப்படியாக மக்கள் படையினர் ஆயுதங்களைக் கீழே போடவும், சீர்திருத்த ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கவும் இது வகை செய்யுமெனவும் நம்பப்படுகிறது.

மட்டக்களப்பு-யாழ்ப்பாணம்

## பஸ் பயணிகளுக்கு பாதையில்தொல்லைகள்

மட்டக்களப்பு, ஜன.5

மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் இ. போ. ச. பஸ் பயணிகள் வீதிகளில் நடைபெறும் சோதனைகள், ஆயுதப்படையினரின் நடமாட்டம் ஆகியவற்றினால் சிலசந்தர்ப்பங்களில் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காலை 6மணிக்கு புறப்படும் பஸ் ஆனையிறவு முதல் ஒட்டமாவடிவரை பல சோதனைகளுக்கு உள்ளாகிறது

இந்நிலையில் மாலை 5 மணிக்கு வந்தடைய வேண்டிய பஸ் ஒட்டமாவடியை வந்தடைய இரவு 8 மணி ஆகிறது.

இரவு 8 மணிக்குப் பின்பு பயணிகளின் பாதுகாப்பு காரணமாக ஒட்டமாவடி கடைத்தெருவில் பஸ் நிறுத்தப்படுகின்றது.

மறுநாள் காலை மீண்டும் 6மணிக்கு அங்கிருந்து புறப்படும் பஸ் 8 மணிக்கு மட்டக்களப்பை அடைகிறது.

இது போன்று மட்டக்களப்பிலிருந்து புறப்படும் பஸ் கிளிநொச்சி அல்லது வவுனியா பஸ் டிப்போக்களிலேயே நிறுத்தப் படுவதாகவும் பயணிகள் தெரிவிக்கிறார்கள்.

## படைவீரர்டிரக் மின் கம்பத்தில் மோதியது

யாழ்ப்பாணம், ஜன 5

ஆயுதப் படையினர் சென்ற டிரக் மின்கம்பத்தில் மோதியது.

மட்டக்களப்பு கல்லடியில் இவ்விபத்து நடந்தது.

நேற்று பிற்பகல் 3-30 மணியளவில் நடைபெற்ற இவ்விபத்தில் 8 ஆயுதப்படை வீரர்கள் காயமடைந்தனர்.

4 பேருக்குப் படுகாயம் ஏற்பட்டது.

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் இவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்னர் கொழும்புக்கு ஹெலிக்கொப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டனர்.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# சுன்னாகம் ப.நோ.கூ.ச பங்கீட்டுப் பொருள் குறைக்கப்பட்டது ஏன்?

சுன்னாகம் ஜன.5

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கப்படும் பங்கீட்டு உணவுப் பொருள்களின் அளவு திடீரென்று குறைக்கப்பட்டுள்ளது குறித்து கண்டனம் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சுன்னாகம் பிரஜைகள் குழு இது சம்பந்தமாக மகஜர் ஒன்றை யாழ். அரசாங்க அதிபர், உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளது.

70,000 மக்களுக்குச் சேவை புரிவது சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,

யாழ். மாவட்டத்திலேயே லாபகரமாகஇயங்கும் சங்கமும் இதுவே.

19 பேக்கரிகள், 40சில்லறை விற்பனை நிலையங்கள், 16 அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்கள்,252 சில்லறை விற்பனை நிலையங்கள் ஆகியவற்றுக்கு உணவுப் பொருள்களை இச்சங்கம் தான் விநியோகித்து வருகின்றது.

இப்படி பிரஜைகள் குழு மகஜரில் கூறியுள்ளது.

பிரதம மந்திரி, உணவு [illegible] அமைச்சர் ஆகியோருக்கும் இது சம்பந்தமாக பொதுநல ஸ்தாபனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

கடற்படை கைது செய்த

## 17 பேர் இராணுவ விசாரணையில்

யாழ்ப்பாணம், ஜன. 5

காரைநகர் கடற்படையினரால் கடலில் வைத்து கைது செய்யப்பட்ட 17 சந்தேக நபர்களும் இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளனர்.

50 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த கடத்தல் பொருட்களும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வள்ளமும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றிய பொருள்கள் கடற்படை முகாமில் வைக்கப்பட்டு உள்ளன.

இராணுவ விசாரணை முடிவுற்ற பின்னர் கைப்பற்றிய பொருள்கள் மதிப்பீடு செய்யப்படும்.

சுங்க உதவிக் கலெக்டர் திரு. செல்லையா கணேஷ் தலைமையிலான குழு இம்மதிப்பீட்டு விசாரணையை நடாத்தும்.

அதன் பின்னர் இப்பொருள்கள் கடற்படை முகாமிலேயே ஏலத்தில் விற்கப்படும்.

### பாலம் தகர்ப்பு

திருகோணமலை, ஜன. 5

திருகோணமலைத் தொகுதியில் இறக்கண்டி பாலம் வெடிவைத்துச் சேதமாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம் பெற்றது.

போராளிகள் தான் இதைச் செய்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

### கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன. 5

வவுனியா தொலைத் தொடர்பு அதிகாரியின் வீட்டில் நேற்று முன்தினம் கொள்ளை இடப்பட்டது.

அந்த அதிகாரியின் பெயர் திரு. கந்தையா.

இரவு 11 மணியளவில் இக்கொள்ளை நடந்தது.

10,000 ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளை இடப்பட்டன.

## கிறிஸ்துவின் போதனை உயிர்கள்மீது அன்பு கொள்ள வேண்டும் என்பதே

### வண பிதா பயஸ் ஆசியுரை

கிளிநொச்சி, ஜன 5

கிறிஸ்துவின் போதனைப்படி உயிர்கள் மீது அன்பு கொள்ள வேண்டும். எதிரியையும் அன்பு கொண்டு அணுக வேண்டும். உயிரை மதிக்க வேண்டும்.

1986ஆம் ஆண்டு புதுவருடப்பிறப்பை ஒட்டி கிளிநொச்சி புனித திரேசா ஆலயத்தில் நடைபெற்ற வருடப்பிறப்பு விழாவின் போது ஆசியுரை நல்கிய வண. பிதா ம இ. பயஸ் அடிகளார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து ஆசியுரை வழங்குகையில் கூறியதாவது:

எம்மை அன்போடு வளர்த்தெடுக்கும் தாய் பற்றியும் தாயின் அன்பு பற்றியும்முதலில் சிந்திக்க வேண்டும். தாயின் அன்பு தான் எல்லாவற்றிலும் பெரிது.

தமதுபிள்ளைகளுக்காக, கணவனுக்காக, தாம் செய்யும் தொழிலுக்காக, தமது குடும்பத்திற்காக இயன்றவரை பாடுபடுபவர் தாய்.

தனக்காக வாழாது பிறருக்காக வாழ்பவள் தாய். ஆகவே நாம் எவரும் தாய் அன்பை மறந்து விட முடியாது.

அன்று தாய்க்குலத்துக்கு எடுத்துக்காட்டாக 'அன்னை மரியாய்' வாழ்ந்து காட்டியுள்ளார்.

அவரின்வழியில் தாய்க்குலத்தை ஆசீர்வதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுவோமாக.

இப்படி அவர் கூறினார்.

புங்குடுதீவு, வேலணையில்

## சிறிய தராசுகள் பாவனையில் இல்லை

### பாவனையாளர் பாதிப்பு

யாழ்ப்பாணம். ஜன 5

புங்குடுதீவு, வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் 100கிராம் மற்றும் 150கிராம் நிறுக்கக் கூடிய சிறிய தராசு பாவனையில் இல்லை.

ஆகக் குறைந்தது 350 கிராம் நிறுக்கக் கூடிய வசதிதான் அங்கு உண்டு என்பது தெரிய வருகிறது.

இது பாவனையாளரைப் பெரிதும் பாதிக்கிறது.

எனவே சிறிய தராசுகளும் பாவனையில் இருக்க முகாமைத்துவம் வசதி செய்ய வேண்டும்.

வேலணை பிரதேச பாவனையாளர் சங்கம் மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

இக்கூட்டத்துக்கு வேலணை அரசாங்க அதிபர் செல்வி. மைதிலி சோமசுந்தரம் தலைமை வகித்தார்.

விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு கே. கே. மதிவதனன், செயலாளர் திரு. எஸ். பூராசா ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

## ஜனவரி 15 வரை உணவு முத்திரை செல்லுபடியாகும்

யாழ்ப்பாணம், ஜன. 5

சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி காலாவதியான உணவு முத்திரை இவ்வாண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

உணவு முத்திரை வழங்குவதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தால் இம்முடிவு எடுக்கப்பட்டது.

### மக்கள் முகம்

### வதிரி சைவசமய பாதுகாப்புச்சபை

யாழ்ப்பாணம், ஜன. 5

வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலய மண்டபத்தில் அண்மையில் வதிரி சைவசமய பாதுகாப்புச் சபை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

திரு. வ. க. இராசையா ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் போஷகர்களாக சைவப்புலவர் சி. வல்லிபுரம், வ. க. இராசையா ஆகியோர் தெரிவாகினர்.

மற்றும் தெரிவுகள் வருமாறு;-

தலைவர் திரு. ஆ. க. கதிரேசன் உபதலைவர் திருமதி. சந்திரலேகா பேரின்பநாயகம், செயலாளர் திரு. க கமலாகரன், உபசெயலாளர் திருமதி சந்திராதேவி கமலாகரன், பொருளாளர் திருமதி தவமணிபாலேந்திரன்.

அறுவர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

உலைக்களத்தில் வெள்ளியும் உலையில் பொன்னும் பரிசோதிக்கப்படுவது போல மனிதன் தன்னைப் புகழ்கிறவனுடைய வாயால் பரிசோதிக்கப்படுகின்றான். அர்ரமியின் இதயம் தீமையைத் தேடுகிறது. நேர்மையான இதயமே அறிவைத் தேடுகின்றது.

- பைபிள்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல. 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805 22073
05-01-86 த. பெ. 23

## யுத்த நிறுத்தமா யுத்தப் பிரகடனமா?

யாழ்ப்பாணத்தில் நேற்றும் ஒரு கொலைக் களம் உருவாக்கப்பட்டது. அது இம்முறை நகரின் மத்தியில், சேந்திர இடத்திலேயே இடம் பெற்றது.

தமது அன்றாட சொந்தத் தேவைகளைச் செய்வதற்காக வீடுகளை விட்டுப் புறப்பட்ட போது இப்படி ஒரு நிர்க்கதி தங்களுக்கு ஏற்படும் என்று பாதிக்கப்பட்டவர்கள் நினைத்திருப்பார்களோ என்னவோ!

இலங்கை என்ற இந்த நாட்டில், தமிழன் என்ற இனத்தைச் சேர்ந்த ஒரு ஜீவன் தானும் பாதுகாப்பாக இருக்க முடியாது. என்ன நேரத்திலும் எந்த இடத்திலும் வைத்து தமிழ் ஜீவன்கள் பறிக்கப்படலாம் என்ற ஆபத்தான நிலை இப்போது உருவாகி இருக்கிறது. இதனை இப்பத்தியில் பலதடவைகள் சுட்டிக் காட்டி உள்ளோம்.

"இறப்பதற்கே தொழிலாகிப் பிறக்கின்றூரே" – என்று நாவுக்கரசர் கூறினர். இப்படி அவமாகச் சாகடிக்கப்படுவதையும் அவர் மனதில் கொண்டு பாடினரோ?

நாளாந்தம் சிறு சிறு எண்ணிக்கையாகத் தமிழர்கள் கொலை செய்யப்படுகிறார்கள். மேலோட்டமாகப் பார்க்கையில் எண்ணிக்கை குறைவாகத் தெரிந்தாலும், கூட்டு மொத்தமாகப் பார்த்தால் மாதாந்தம் சராசரி நூறு பேர்களாவது சுட்டுக் கொல்லப்படுகிறார்கள் என்று கொள்ளலாம்.

பேச்சுவார்த்தை, சமாதானத் தீர்வு, அரசியல் தீர்வு என்று கூறிக் கொண்டே தமிழர்களை இவ்வாறு திட்டமிட்டு அழிப்பது நடைமுறை வழக்கமாகி விட்டது. தட்டிக் கேட்க எவருமில்லை என்ற எண்ணத்துடன் தான் இந்தப் படுகொலைகள் நடக்கின்றன.

அதுவும் அண்மைக் காலமாக விமானத் தாக்குதல்கள் முகாந்திரம் இல்லாமல் நடக்கின்றன. இது மிகவும் பாரதூரமான விஷயம்.

பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தத்தில் கூட சிவிலியன்கள் வாழும் பகுதிகளில் விமானத் தாக்குதல் நடத்துவது தடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனல் இங்கு மக்கள் நெருக்கமாக வாழும் நகரப்பகுதிகளிலேயே விமானத்தில் இருந்து குண்டுகள் தீர்க்கப்படுகின்றன. ஆஸ்பத்திரியின் சுவரில் சன்னங்கள் பாயும் அளவுக்கு துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது.

சென்றமுறை கண்காணிப்புக்குழு யாழ்ப்பாணம் வந்த போதும் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. நகரம் பதற்றம் அடைந்தது. ஆனல் எவரும் பாதிக்கப்படவில்லை.

ஏற்கனவே நடந்த தாக்குதல்கள்குறித்து விசாரணை செய்வதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு வந்த தினத்தில் மீண்டும் யுத்த நிறுத்தம் மீறப்படுகிறது.

இதற்குப் பெயர் யுத்த நிறுத்தமா? அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை ஒரு தலைப்பட்சமாக அறிவித்திருந்தாலும் அதனை மீறி வருகிறது. உண்மையாகவே அதனைச் செய்வதானல் ஆயுதப் படையினரை முகாம்களில் இருந்து புறப்படக்கூடாது என்று கட்டுப்படுத்த முடியாதா?

அவ்வாறு செய்ய முடியாவிடில் நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ் மக்கள்மீது யுத்தப் பிரகடனம் செய்திருக்கிறோம் என்று அரசாங்கம் பிரகடனப் படுத்தட்டும். வெளி உலகமும் அதை அறிந்து கொள்ளட்டும்.

## நம் இசை தமிழி.....

(2-ம் பக்கத் தொடர்ச்சி) அளப்பரிய சேவை ஆற்றியுள்ளனர்.

இசையில் தாளத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது நிறுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

பரத முனிவர், தமிழ் நாட்டுக்கு உரியவர். பரத நாட்டியம் அவரது படைப்பு. பரத முனிவர் தமிழில் தான் பரதம் பற்றி நூல் படைத்தார். அவரின் தமிழ்ப்படைப்பு தொலைந்து விட்டது. இன்று இருப்பது சமஸ்கிருத மொழிபெயர்ப்புத் தான். பரதம் தமிழனின் அரும்பெரும் சொத்து.

தமிழில் கீர்த்தனைகளை இயற்றிய மும் மூர்த்திகளான முத்துத் தாண்டவர், அருணசலக் கவிராயர், மாரிமுத்துப் பிள்ளை ஆகியோருக்கு சீர்காழியில் நினைவுச் சின்னம் அமைக்கப்படவேண்டும்.

திருவையாற்றில் தியாகராஜ சுவாமிகள் உற்சவம் நடத்தப்படுகின்றது அல்லவா! அதுபோன்று சீர்காழியிலும் ஆண்டுதோறும் இசைவிழா நடத்தப்படவேண்டும் — இப்படி பொள்ளாச்சி மகாலிங்கம் கூறி முடித்தார்.

வித்துவான் பி.ராஜம் ஐயர் தலைமைவகித்தார். அவருக்கு சங்கீத கலா சிகாமணி பட்டம் வழங்கப்பட்டது.

### பிரியாவிடை

யாழ்ப்பாணம் ஜன 5

யாழ். தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் இரவு பொறுப்பதிகாரியாகக் கடமை ஆற்றிய திரு பி. கந்தசாமி 25 வருடகால சேவையின் பினனர் ஓய்வு பெற்றார்.

யாழ். பெரியதபாற் கந்தோர், தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்களினல் நாளை 6 ஆம் திகதி இவருக்கு பிரியாவிடை வைபவம் ஒன்று நடத்தப்படுகிறது

திரு கந்தசாமியின் இடத்துக்கு கிளிநொச்சி தபால் நிலையத்தைச் சேர்ந்த திரு. கே.எஸ். சிவசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

# தேவ சமூகத்தில் இளைப்பாறி தேவனின் ஜெயம் பெறுங்கள்

இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்பட்டுக் கானானை நோக்கிப் பிரயாணம் செய்கையில் பாளயத்தின் பின்வந்து கொண்டிருந்த பெலவீனரையெல்லாம் அமலேக்கியர் வெட்டினர்கள். (உபா. 25:17,18) தேவன் அவர்களை வானத்தின் கீழெங்கும் இராத படிக்கு நாசம் பண்ணுவேன் என்றார்.

மோசே யோசுவா என்னும் வாலிபனிடம் நீ மனிதரைத் தெரிந்து கொண்டு அமலேக்கோடு யுத்தம் பண்ணு, நான் தேவனுடைய கோலைப் பிடித்துக் கொண்டு மலையுச்சியில் நிற்பேன் என்றான்.

யோசுவா, மோசேயின் வார்த்தையின் படியே அமலேக்கோடு யுத்தம் பண்ணினன். மோசே தன் கையை ஏறெடுக்கையில் யோசுவா மேற்கொண்டான், தாழவிடுகையில் அமலேக்கு மேற்கொண்டான்.

கர்த்தருடைய ஊழியத்திலும் யோசுவாவைப் போன்றவர்களும் மோசேயைப் போன்வர்களும் காணப்படுகிறார்கள்.

மோசேயைப் போன்றோர் அனுபவம் வாய்ந்தவர்கள்; மறைந்திருந்து கர்த்தருக்காய்க் கிரியை செய்பவர்கள்; மற்றவர்கள் காணப் பெரிய கிரியைகளைச் சரீர பிரகாரமாய் செய்ய முடியாவிட்டாலும் ஊழியத்தின் பாரத்தால் நிறைந்தருப்பார்கள்.

ஜெபத்தில் போராடி ஊழியத்திற்காக உபவாசித்துக் கண்ணீரோடே கர்த்தருக்குள் காணப்படுவார்கள்.

கர்த்தருடைய ஊழியம் பாதுகாக்கப்பட்ட வளர்ச்சியடைய இவர்கள் தான் மூல காரணமாயிருக்கிறார்கள்.

ஊழியர்கள் மத்தியிலும் விசுவாசிகள் மத்தியிலும் கர்த்தர் பலரை இவ்வித ஊழியம் செய்ய எழுப்பியிருக்கிறார். அப்படிப்பட்டவர்களிடம் பரிசுத்தவான்கள் சுவிசேஷத்தின் வாசல் திறக்கப்படவும், வாக்கு எனக்கு அளிக்கப்படவும் எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள் என்றார்.

யோசுவாவைப் போன்றவர்கள் போர் முனையில்யுத்தக் களத்தில் போராடுபவர்கள் பட்டயக் கருக்கால் சத்துருவைமுறியடிப்பவர்கள். சத்தியத்தால், பூரண உபதேசத்தால் சத்துருவின் வல்லமையை முறியடிப்பவர்கள் ஆவர்.

ஞானக்கதிர்

கர்த்தருடைய கையில் எடுக்கப்பட்டுக் கர்த்தருக்கென்று வல்லமையாய்ப் பாவிக்கப்படுகிறவர்கள். தாங்கள் பாவிக்கப்படுவது தங்கள் திறமையாலோ, பரிசுத்தத்தாலோ, பெலத்தாலோ, அறிவினலோ, அனுபவத்தாலோ அல்ல என்றும், தேவனுடைய கிருபையினலும் மறைந்திருந்து கிரியை செய்யும் பரிசுத்தவான்களின் ஜெபம், கண்ணீர், உபவாசம் இவற்றினலும் தான் என்பதையும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

மோசே தன் கையை ஏறெடுக்கையில் யோசுவா மேற்கொண்டான். அவன் தன் கையைத் தாழ விடுகையில் அமலேக்கு மேற்கொண்டான் என்பது இதனையே தமக்கு எடுத்துக் காட்டுகிறது.

மோசேயின் கைகள் அசந்து போயின. உடனே ஆரோனும் ஊரும் ஒரு கல்லைக் கொண்டு வந்து வைத்தார்கள். மோசே அதன் மேல் உட்கார்ந்தான். அவர்கள் இருவரும் மோசேயின் இரு கைகளையும் தாங்கினர்கள். சூரியன் அஸ்தமிக்கும் வரைக்கும் அவனுடைய கைகள் ஒரே நிலையாயிருந்தது.

மோசேயைப் போன்றவர்கள் பரிசுத்தவான்களின் ஐக்கியத்தையும் சபையின் ஆவிக்குரிய உதவிகளையும் நன்றாய் அறிந்து கர்த்தரை இப்படிப்பட்ட சூழ்நிலையில் மகிமைப்படுத்துவார்கள்.

மோசே சபைக்கு நடத்திப்புக்காரனுல் ஆரோனும் ஊரும் போல சபையார் அவனைத் தாங்க வேண்டும்.

அவன் தன் கையை ஏறெடுப்பதும் தாழ விழுவதும் சபையார் அவனைத் தாங்குவதைப் பொறுத்திருக்கிறது. ஆகையால் ஆரோனையும் ஊரையும் போல நாம் நமது ஊழியர்களையும் ஊழியத்தில் முன்னணியில் நிற்கும் விசுவாசிகளையும் நமது ஜெபங்களிலும் உபவாசத்திலும் தாங்குவோமாக!

மோசே கல்லின் மேல் உட்கார்ந்தது போல நாமும் கர்த்தராகிய இயேசுவின் சமூகத்தில் உட்கார்ந்து இளைப்பாற வேண்டும். சிலர் ஊழியம். ஊழியம் என்று தேவ சமூகத்தில் இருப்பதை விட்டுவிடுகிறார்கள். இதன் மூலம் அவர்களுடைய ஜீவியத்தில் பல சோர்வுகளும் தோல்விகளும் ஏற்படுகின்றன.

மோசேயும், யோசுவாவும், ஆரோனும், ஊரும் சேர்ந்து அமலேக்கியரை முறியடித்து ஜெயம் பெற்றது போல, நாமும் நடத்திப்புக்குக் கீழ்ப்படிந்து, தேவ கிருபையைச் சார்ந்து ஒருவரையொருவர் ஜெபத்தில் தாங்கி, தேவ சமூகத்தில் இளைப்பாறுவோமானல், தேவன் நமக்கு ஜெயம் கொடுப்பார்.

நன்றி பெந்தெகொஸ்தின் பேரொலி

# கடையிற் சுவாமி நெறி

## ஒழுகி அமெரிக்காவில்சிவத்தொண்டு புரியும் குவாய் ஆதீன கர்த்தர்

சைவ குரு பரம்பரை புனித இமாலயப் பிரதேசத்தில் ஆரம்பித்ததாகவே கொள்ளலாம். அங்கிருந்து இருடிகள் பல திக்கும் சென்று பரப்பிய ஆத்ம ஞானம் பெற்றவர்கள் வந்த மரபில் தோன்றிய சித்தரே யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகள். இவர் தனது சத்குருவின் உபதேசங்களுக்கிணங்க யாழ்-குடாநாடெங்கும் திரிந்து பல சித்துக்களைச் செய்து சிவ பக்தியை வளர்த்து வந்தார். இவர் வரலாற்றை அறியாதார் யாருமிலர். இவர் 13-10-1891 இல் மகா சமாதியடைந்தார்.

கடையிற்சுவாமி தனது சீடர்களுள் செல்லப்பருக்கு ஞானதீட்சை கொடுத்து அடுத்த சத்குருவாக்கினர். செல்லப்பா சுவாமி நல்லூர் கந்தசாமி கோயில் தேரடி வில்வமர நிழலில் தவம்

> ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் 59 வது பிறந்த தினம் இன்று. அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

செய்து வந்தார். இவர் தனது குருவைப் போல் சித்துக்கள் செய்யாது தனிமையில் ஆன்மீகத் துறவை மேற்கொண்டார். அவர் 1915 மார்ச் மாதத்தில் மகா சமாதியடைந்தார்.

செல்லப்பா சுவாமியைக் குருநாதனுகக் கொண்டு 5 வருடங்கள் வரை ஞானப் பயிற்சியும் சந்நியாச தீட்சையும் பெற்றவரே சிவயோக சுவாமிகள். இவர் இலங்கை முழுதும் பாதயாத்திரை மேற்கொண்டபின் கொழும்புத்துறையில் தவ வாழ்வை மேற்கொண்டார்.

தன்னை நாடி வந்தோர்க்கு புத்திமதி கூறுவார். இறைவன் பாலும் தன் குருநாதன் பாலும் சொல்லெளிமையும் பொருளருமையும் கொண்ட 'நற்சிந்தனை'ப் பாடல்களைப் பாடியுள்ளார். யோகர் 24-3-1964 இல் மகா சமாதியடைந்தார்.

யோகப் பயிற்சியும் ஞானதாகமும் நாட்டியத் திறமையுங்கொண்ட ஒரு அமெரிக்க இளைஞன் கலாசார நடனக் குழுவுடன் இலங்கை வந்தவர் ஒரு சத்குருவைத் தேடி இங்கே தங்கிவிட்டார்.

தனது ஆசாபாசங்களைத் துறந்து இரண்டு வருடங்கள் இலங்கையில் அலைந்து, திருவருள் கைகூட, கொழும்புத் துறையில் யோகர் சுவாமியைக் கண்டார். இந்த மேல்நாட்டு இளைஞனின் விழிப்புணர்ச்சியால் கவரப்பட்ட யோகர் இவருக்கு 22 வயதில், 1949 மே பௌர்ணமி நன்னாளில் 'சுப்பிரமுனிய' என்னும் தீட்சா நாமத்தைச் சூட்டிப் பஞ்சாட்சர மந்திரத்தையும் உபதேசித்தார்.

அத்துடன் "இது அமெரிக்காவில் கேட்கும். இப்பொழுது உலகைச் சுற்றிவா. சிங்கத்தைப் போன்றுகர்ச்ஜனைசெய்" என்று கூறி இவரது முதுகில் ஓங்கித் தட்டிச் சித்தர் பரம்பரைத் தீட்சையையும் அளித்து விட்டார் சிவயோக சுவாமி.

சுப்பிர முனியர் அமெரிக்காவிலும் யாழ்ப்பாணத்திலும் ஏழாண்டுகள் தவமியற்றினர். பின்பு இலங்கை, இந்தியாமுதலியநாடுகளுக்கு தவ யாத்திரை செய்தார்.

இக்கால கட்டத்தில், 30 வருஷங்களுக்கு முன் அளவெட்டியில் சுப்பிரமுனிய ஆச்சிரமத்தை அமைத்து சமயப் பணி செய்யும் வசதிகளை ஏற்படுத்தினர். அண்மைக் காலத்தில் சுவாமிகளின் ஆசியுடன் கோப்பாயில் 'சுப்பிர முனிய கோட்டம்' அமைந்தது.

1970-ஆம் ஆண்டில் குவாய்த் தீவில் இயற்கைச் சூழல் நிறைந்த இடத்தில் ஆதீனம் ஸ்தாபிக்கப்பட்டது. அதையடுத்து 1973இல் நடராஜப் பெருமானுக்கு

ரமேஷ் குமார்

'கடவுள் இந்து ஆலயம்' நிறுவப்பட்டது. இவ் ஆலயத்தில் நித்திய பூஜைகளும் சகல சைவ விழாக்களும் கொண்டாடப்படுகின்றன.

20 வருடங்களுக்கு முன் சான்பிரான்ஸிஸ்கோவில் சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட 'ஹிமாலயன்கல்வியகம்' சைவ தர்மத்தை நேராகவும் தபால் வழியாகவும் போதித்து வருகிறது. இந்நகரில் ஒரு பழனி சுவாமி கோவிலும் கட்டப்பட்டுள்ளது.

ஹவாய் சைவ சித்தாந்த திருச்சபைக் அமெரிக்கா, கனடா, மொறிஷியஸ், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் தற்போது 18கிளை நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

சுவாமிகள்நிதி சேர்த்து 1983ஜூலை அகதிகளுக்கும், பின் வடபகுதியில் உழைப்போரை இழந்த குடும்பங்களுக்கும் தாராளமாக உதவி வழங்கியுள்ளார். கிளிநொச்சி ஜெயபுரத்தில் குடியேற்றப்பட்ட மக்களின் வசதிகளுக்காக மருத்துவமனை அமைக்கவும் நிதியுதவி வழங்கியுள்ளார். அவரது அருட் பணிகளை இந்த நாளில் நினைவு கூர்வது பொருத்தமுடையதே.



பொய்யாமொழி

குறள்:

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.

பொருள்:

ஒருவன் வாழ்நாளில் முயற்சி மேற்கொண்டு செய்யத்தக்கது அறமே; செய்யாமல் காத்துக் கொள்ளத்தக்கது பழியே.

## வெள்ள வாய்க்கால்களை அழிக்காதீர் என வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜன.5

கிராமமக்களே வெள்ள வாய்க்கால்களை அழிக்காதீர்கள். வாய்க்கால்கள் அழிக்கப்படும் பட்சத்தில் முழுக் கிராமமே பாதிக்கப்படுகிறது.

சிவதரும வள்ளல், க. கனகராசா இவ்வாறு உருக்கமான வேண்டுகோளை விடுத்தார்.

நிகரை ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்ற மரம் நடும் விழாவிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

திரு. ஆ. ஞானசேகரன் இவ் வைபவத்துக்கு தலைமைவகித்தார்.

திரு. கனகராசா தொடர்ந்து கூறியதாவது:–

வெள்ள வாய்க்கால்களிலே குப்பைகளைக் கொட்டுகிறார்கள். பயிர் செய்கிறார்கள். மண் வெட்டுகின்றார்கள். இதனாலே வெள்ளம்ஓட முடிவதில்லை.

இதன் விளைவு என்ன? மழை நீரினல் வெள்ளம் ஏற்படுகிறது. பயிர்கள் நாசம் அடைகின்றன. வீடுகள்கூட அழிகின்றன. மக்கள் அகதிகள் ஆகின்றனர், இதனை உணர்ந்து நமது மக்கள் செயற்பட வேண்டும்.

இவ்வாறு அவர் ஆலோசனை கூறினர்.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் திரு. ஜி. சிதம்பரநாதன், திரு. என். மகிழ்ராசன், சமநலத்திணைக்களகொழும்பு அலுவலக தலைமைக் கணக்காளர் திரு. ஏ. முத்துலிங்கம், ஆசிரியர் எஸ். சாம்பசிவம் உட்படப் பலர் உரையாற்றினர்.

### உதவி திட்டமிடல் பணிப்பாளர் நியமனங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 5

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் பின்வரும் திட்டமிடல் அதிகாரிகள் உதவித்திட்டமிடல் பணிப்பாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

திரு. சு. ஜெயராம் (மட்டக்களப்பு) திரு. நா. புகேந்திரன் (திருகோணமலை) திரு. டி. துரைசிங்கம் (வவுனியா) திரு ஆர் இராசநாயகம் (மன்னர்) திரு. கே. சிவலிங்கம் (முல்லைத்தீவு) திரு. கே. பாலகிருஷ்ணன் (அமைச்சு)

பலாலியில்

## மேலும் 38 குடும்பங்கள் வெளியேறின

காங்கேசன்துறை, ஜன 5

பலாலி பகுதியில் ஏற்பட்டு வரும் பதற்ற நிலையால் அப்பகுதியிலிருந்து மேலும் 38 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

ஏற்கனவே வசாவிளான் சூடுகட்டுவன் என்னும் கிராமத்திலிருந்து 25 குடும்பங்கள் இடம் பெயர்ந்து வசாவிளான் சாதன பாடசாலையில் தஞ்சம் அடைந்தது தெரிந்ததே.

அச்சுற்றடலில் பதற்ற நிலை நீடிப்பதை அடுத்தே மேலும் 38 குடும்பங்கள் இடம் பெயர்ந்து வசாவிளான் சாதன பாடசாலையிலும், வசாவிளான் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் தஞ்சமடைந்துள்ளன.

மயிலிட்டி வடக்கிலிருந்து 6 குடும்பங்களும், வசாவிளானிலிருந்து 32 குடும்பங்களும் இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளன.

இவர்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியதால் இவர்களால் செய்கை [illegible] பயிர்கள் தகுந்த பராமரிப்பின்றி கருகி அழிந்து போகும் நிலை உருவாகியுள்ளது.

தமது வீடுகள் உடைமைகளை விட்டு இடம் பெயர்ந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ள தமக்கு வேறு இடங்களில் காணிகள் தருமாறும் தமது மாமூல் வாழ்க்கையைத் தொடர வழிசமைக்குமாறும் இடம் பெயர்ந்தவர்கள் யாழ். அரசாங்க அதிபரையும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களையும் கோரியுள்ளனர்.

### ரவிசேகரனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ் பல்கலைக் கழக மாணவன் இ. ரவிசேகரனுக்கு (சுகந்தன்) யாழ் பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகம் முதலாண்டு நினைவஞ்சலி செலுத்தியது.

"இந்த மண்ணின் அவலங்கள் தனக்கும் சொந்தமானவை என இம்மண்ணிலேயே எமது மக்களுக்காகப் போராடி வீரமரணம் அடைந்தவன்"– என்று கழகம் வெளியிட்ட அஞ்சலியில் கூறப்பட்டது.

### முள்ளிப்பொத்தானை 2 வீடுகளில் கொள்ளை

திருகோணமலை, ஜன. 5

முள்ளிப்பொத்தானைக் கிராமத்தில் இரண்டு வீடுகள் இனந் தெரியாதோரால் கொள்ளை இடப்பட்டன.

ஒரு சிங்களவரின் வீட்டில் 28,000 ரூபா பணம் கொள்ளை இடப்பட்டது. [illegible] 18,000 ரூபா பணமும் [illegible] பெறுமதியான நகைகளும் கொள்ளை இடப்பட்டன.

## விறகு வெட்டச் சென்றவரை கரடி தாக்கியது

கிளிநொச்சி, ஜன. 5

விறகு வெட்டச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் கரடியின் தாக்குதலுக்கு இலக்காகி கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கிளிநொச்சி 155 ஆம் கட்டை என்னுமிடத்திலுள்ள எஸ். சீனிவாசகம் என்பவரே கரடியால் தாக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்.

கடந்த சில தினங்களுக்கு முன் நண்பர் ஒருவருடன் தமது வீட்டில் இருந்து சுமார் ஏழு மைல் தொலைவிலுள்ள காடு ஒன்றுக்கு விறகு வெட்டுவதற்காக இவர் சென்றிருந்தார்.

காட்டில் கரடி ஒன்று வருவதைக் கண்டு தனது கையில் இருந்த கோடரியால் அதனை அடித்து விரட்ட முற்பட்டார்.

அப்போது அவருக்குப் பின்னல் வந்த மற்றும் ஓர் கரடி அவர் மீது பாய்ந்து அவரைக் கடித்தது.

அவர் அவலக் குரல் எழுப்பவே அவரது நண்பர் ஓடி வந்து கோடரியால் மற்றக் கரடியைத் தாக்கி அவரைக் காப்பாற்றினர்.

பின்னர் காயம் அடைந்தவரை தோளில் சுமந்து கொண்டு ஆஸ்பத்திரி வந்து சேர்ந்தார்.

### காங்கேசனுக்கு அரிசிக் கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம், ஜன.5

அடுத்த வாரம் இரண்டு கப்பல்களில் அரிசி காங்கேசன் துறைக்கு வருகிறது.

பெந்தோட்ட, மட்டுராஜா என்னும் இரண்டு கப்பல்களில் இரண்டாயிரம் தொன் அரிசி பாகிஸ்தானில் இருந்து கொண்டுவரப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TOEFL**
Date of Exam: 8-3-86
Course begins on: 11-1-86
Course Fees: Rs. 250
Lecturer: Mr. KANDIAH NAVERENDRAN
CANTABIA INSTITUTE
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

# உதயன்

05-01-1986

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING**
WEEKEND-COURSE (6 Months)
BASIC LANGUAGE
ஆரம்பம்: 25-1-86
கட்டணம், ரூ. 150/-
60 மணித்தியாலங்களுக்குக் குறையாத PRACTICALS
CANTABIA INSTITUTE
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

# யாழ்தேவி ரயில் பெட்டியில் குண்டு

கொழும்பு, ஜன. 5

கொழும்பு தெமட்டகொடையில் ரயில்கள் நிறுத்தி வைக்கும் இடத்தில் நேற்றுக்காலை ஏற்படவிருந்த பெரும் குண்டு வெடிப்பு ஒன்று இறுதி நேரத்தில் தவிர்க்கப்பட்டதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

யாழ்தேவி கடுகதி ரயில் பெட்டி ஒன்றின் கீழ்ப்பாகத்தில் வெடிப்பொருள்கள் நிறைந்த பெற்றோல் டின் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக 'லங்காபுவத்தை' மேற்கோள்காட்டி அறிவிக்கப்பட்டது.

இந்த டின்னில் 7 கிலோ கிராம் நிறையுடைய அதிசக்திவாய்ந்த வெடிப்பொருள்கள் நிறைந்து இருந்ததாகக் கூறப்படுகிறது.

குண்டை வெடிக்கச் செய்யும் இரண்டு கருவிகளும் 4 டோர்ச் பற்றறிகளும் இவற்றுடன் காணப்பட்டனவாம்.

இந்தக் குண்டு நேற்று பிற்பகல் 2-30 மணிக்கு வெடிப்பதற்கு ஏற்ற வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

இந்தக் குண்டு வெடித்திருந்தால் பெரும் அழிவு ஏற்பட்டிருக்கும் எனவும் கூறப்பட்டது.

### ரயில நிலயத்தில் நேற்று டிக்கெட்

யாழ்ப்பாணம், ஜன 5

ரயில் பயணிகளுக்கு யாழ். ரயில் நிலயத்தில் வைத்தே பயணச் சீட்டுகள் வழங்கப்பட்டன.

பாதுகாப்பு நடவடிக்கை காரணமாக கோட்டையில் வைத்தே பணத்தைப் பெற்றுக் கொண்டு ரயில் பயணச் சீட்டுகள் பயணிகளுக்கு வழங்கப்பட்டு வந்தன.

நேற்று நகரில் நடந்த அசம்பாவிதங்களைத் தொடர்ந்தே, ரயில்நிலயத்தில் வைத்து பணத்தைப் பெற்றுக்கொண்டு பயணச் சீட்டுகள் வழங்கப்பட்டன.

## ஆஸ்பத்திரி ஊழியர் மயிரிழையில் தப்பினர்

### குண்டு சுவரைத் துளைத்தது

நல்லூர், ஜன. 5

நேற்று நடைபெற்ற துப்பாக்கிச்சமரின்போது ஆஸ்பத்திரி ஊழியர்கள் சிலர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

யாழ் ஆஸ்பத்திரி சுகாதாரப் பகுதியில் ஊழியர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்பொழுது மணிக்கூட்டுக் கோபுரப் பக்கமாக இருந்து சிதறிவந்த குண்டு அலுவலகச் சுவரையும் அலுவலகக் கதவையும் துளைத்துக் கொண்டு வெளியேறியது.

அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இந்த அலுவலகத்தின் ஜன்னல் கண்ணாடிகளும் குண்டு பட்டு சிதறின.

பின்னர் ஊழியர்கள் அங்கு கடமையாற்றப் பயந்து வேறிடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

## விடைத்தாள் திருத்தும் வேலைகள் வேம்படியில் நேற்று நடக்கவில்லை

நல்லூர், ஜன. 5

வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று விடைத்தாள் திருத்தும் வேலைகள் நடைபெறவில்லை.

காலையில் உரிய நேரத்தில் விடைத்தாள் பைக்கெட் ஒன்று திருத்துவதற்காக திறக்கப்பட்டு வேலைகள் ஆரம்பமாக இருந்தன.

அந்த வேளையில் துப்பாக்கிச் சன்னங்கள் கல்லூரிச் சுவரில் பாய்ந்தன.

இதனால் விடைத்தாள் திருத்தும் வேலைகள் இடை நிறுத்தப்பட்டு ஆசிரியர்கள் வெளியேறினர்.

யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ் இந்து மகளிர் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகிய நிலயங்களில் வழமை போல் விடைத்தாள்திருத்தும் வேலைகள் நடைபெற்றன.

## யாழ்நகரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படவே, பொதுமக்கள் சிதறி ஓடத்தொடங்கினர்.

ஆஸ்பத்திரிக்குள் தஞ்சம் அடையத் தொடங்கினர்.

கோட்டைப் பக்கமாக இருந்து வந்த துப்பாக்கிச் சூடுகள் தாக்கி நான்கு பேர் மரணமானார்கள்.

வானத்தில் இருந்து வந்த சூடுதாக்கி தமது வீட்டில் இருந்து வண்ணார்பண்ணை வாசியான ஒருவர் காயம் அடைந்தார்.

### இறந்தோர் விவரம்

இறந்தவர்கள் விவரங்கள் வருமாறு:-

1. நாகூர் பிச்சை செய்நம்பு வயது 65. முஸ்லிம் பெண். இரண்டு பெண்களுக்கும் ஒரு மகனுக்கும் தாய்.

யாழ்ப்பாணம் ஜும்மா மசூதி ஒழுங்கையைச் சேர்ந்த இவர் யாழ் பஸ்நிலயத்தில் கடலை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர்.

திருமணமான தனது மகளையும் மருமகனையும் நாச்சிக்குடாவில் விட்டுவிட்டு கேரதீவு பஸ்ஸில் யாழ் பஸ் நிலயத்தில் வந்து அவர் இறங்கினார்.

துப்பாக்கிச் சூடு நடந்து கொண்டிருப்பது அவருக்குத் தெரியவில்லை.

பஸ்ஸில் இருந்து இறங்கிய செய்நம்புவுக்கு பிடரியில் குண்டு பாய்ந்தது.

2. அன்ரன் என்று அழைக்கப்படும் தாஸன் ரஞ்சன், வயது 27 அச்சுவேலி வாசி. திருமணமானவர். 1 மகனும் 2 மகள்களும் அவருக்கு உண்டு. மனைவி கர்ப்பிணி.

ரஞ்சன், ஒரு மேசன் யாழ் நகரில் பணியாற்றி வந்தார். நேற்றுக் காலை வேலைத்தலத்திற்குப் போய் இன்று வேலை செய்யவில்லை என்று கூறிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தசமயம், ஆஸ்பத்திரி வீதியில் வைத்து துப்பாக்கிக் குண்டு அவரைத் தாக்கியது.

கழுத்தில் விழுந்த சூடு, இருதயத்துக்குள்ளால் வெளியே வந்தது.

3. கருணைநாதன் சிவநாதன், வயது 24. வேலணை மேற்கு வாசி.

4. ராயப்பு வெலிக்கியூலஸ், வயது 50. ஒன்பது பிள்ளைகளின் தந்தை குருநகர்வாசி. கடற்றொழில் செய்து வந்தார். இடுப்பில் பாய்ந்த துப்பாக்கிக் குண்டு மர்ம ஸ்தானத்தைத் தாக்கியது.

## துப்பாக்கிச் சூட்டில் காயம...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிச்சூடு பட்டது. முதுகுப் பக்கமும் துப்பாக்கிச் சூட்டுக்காயம் உண்டு.

இவருக்கு அவசர சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

3. அக்பர் நிஸார், வயது 18, தையல் தொழில் செய்பவர். யாழ் மூர்வீதி வாசி. கழுத்து வலது பக்கத்தில் துப்பாக்கிச் சூடு தாக்கியது.

4. தம்பிராசா செபஸ்தியாம்பிள்ளை, வயது 45. வான் சாரதி நாவாந்துறை வாசி.

5. இஸ்மாயில் ரசூல்தீன், வயது 27. யாழ். சிவன்பண்ணை வீதியில் வசிப்பவர். ஆஸ்பத்திரி வீதி நடைபாதையில் சீப்புக் கண்ணாடி வியாபாரஞ் செய்பவர். ஹரன் சினிமாவுக்கு முன்னால் வைத்து அவரை துப்பாக்கிச் சூடு தாக்கியது. வலது தொடையில் இரண்டு காயங்கள் ஏற்பட்டன.

6. நாகநாதி கணபதிப்பிள்ளை, வயது 25. வண்ணார்பண்ணையில் பி. ஏ. தம்பி லேனில் வசிப்பவர். தச்சத் தொழிலாளி, ஹெலிகொப்டரில் இருந்து வந்த துப்பாக்கிச்சூடு வீட்டு முற்றத்தில் நின்ற இவரைத் தாக்கியது. வயிற்றில் துப்பாக்கிச்சூடு பட்டது.

7. தரன் வயது 21, வலது பக்கத் தோளில் இவருக்கு துப்பாக்கிச்சூடு தாக்கியது

8. சரவணமுத்து கிருபாகரன், வயது 16. அரியாலைவாசி, மகேஸ்வரி வித்தியாலய மாணவன், மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் வைத்து துப்பாக்கிச் சூடு இவரின் நெஞ்சைத் தாக்கியது.

9. முருகேசு கனகரத்தினம், வயது 60. தெல்லிப்பழைவாசி. ஓய்வுபெற்ற அரச ஊழியர். வலது, இடது கால்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் ஏற்பட்டன.

10. எஸ். சிவநாதன் 26 வயது. குருநகர்வாசி.

11. எஸ். முரளி, வயது 20. யாழ்ப்பாணம் வாசி.

12. என். விக்னேஸ்வரன், வயது 20. திருநெல்வேலிவாசி.

நல்லூர் கூட்டுறவுச் சங்கத்தில விற்பனையாளராகக் கடமையாற்றுபவர். துப்பாக்கிச்சூடு காலில் தாக்கியது.

13. அ. நிக்ஸன். வயது 16. குருநகர்வாசி துப்பாக்கிச் சூட்டினால தோள்மூட்டில் காயம் ஏற்பட்டது.

14. ஞானம் வயது 26. கொட்டடி வாசி. மார்பில் துப்பாக்கிக் குண்டு தாக்கிய காயம் உண்டு.

அவசர சத்திர சிகிச்சை அவருக்கும் அளிக்கப்பட்டது.

## அரசாங்கத்தின் அறிக்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காமையில் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக நம்பகமான தகவல்கள் குழுவுக்குக் கிடைத்திருந்தன.

இதனைப் பொருட்படுத்தாது குழுவினர் இன்று காலை திட்டமிட்டபடி யாழ்ப்பாணம் செல்லுவதற்குத் தீர்மானித்தார்கள்.

அவர்கள் பலாலி விமான நிலயத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

அசோக் ஹோட்டலைச் சுற்றிலும் வைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி வெடிகளை வெடிக்கவைப்பதற்காக பாதுகாப்புப் படையினர் அங்கு சென்றிருக்கிறார்கள் என்பதை கண்காணிப்புக் குழுவினர் அப்போது அறிந்து கொண்டார்கள்.

பாதுகாப்புப் படையினர் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்ததை தமது புலன்விசாரணையிலிருந்து ஊர்ஜிதப்படுத்தியிருந்தார்கள.

இந்தக் குண்டுகளை வெடிக்கச்செய்ய பாதுகாப்புப் படையினர் சென்றபோது அவர்கள் மீது தொடர்ச்சியாக வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

படையினரும் திரும்பிச் சுட்டார்கள் ஆயுதங்கள் பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்கள் வட்டமிட்டுக்கொண்டிருக்க அவர்கள் தமது பணியினை நிறைவேற்றினார்கள்.

இந்த அசம்பாவிதத்தில் 2 பேர் கொல்லப்பட்டதாகவும், 14 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. பாதுகாப்புப் படையினருக்குக் காயம் எதும் ஏற்படவில்லை.

இந்த நிலக்கண்ணி வெடிகளின் இணைப்புக் கம்பிகளை பாதுகாப்புப் படையினர் துண்டித்த போது அவை அருகிலிருந்த வீடு ஒன்றினுள் செல்வதை அவர்கள் கண்டுபிடித்தார்கள். இந்த வீட்டில் எவரும் இருக்கவில்லை.

இத்தகைய நிலையில் கண்காணிப்புக்குழுவினர் பலாலியிலிருந்து அசோக் ஹோட்டலுக்கோ அல்லது யாழ் கோட்டைக்கோ செல்வது ஆபத்தானது என்று ஆலோசனை கூறப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டையை நோக்கி பீரங்கி, துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்ததால் அங்கு செல்ல வேண்டாம் என கண்காணிப்புக்குழுவுக்கு ஆலோசனை கூறப்பட்டது.

இப்படி அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

## இவற்றுக்கும் சேதம்

யாழ்ப்பாணம், ஜன. 5

நேற்றுக் காலை நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் தபால் பகுதி, தொலைத் தொடர்புப் பகுதி கட்டடங்களும் சேதமாகின.

குண்டுகள் கட்டடக் கண்ணாடிகள், சுவர்களில் வந்து பாய்ந்தன. அதனால் உத்தியோகத்தர்கள் பலரும் தப்பி ஓடினர்.

காலை தொடக்கம் இரு பகுதிகளிலும் வேலை எதுவும் நடக்கவில்லை.

தொலைபேசித் தொடர்புத் திணைக்களத்தில் இரவில் தான் உத்தியோகத்தர்கள் கடமைக்கு வந்திருந்தார்கள்.

வீரசிங்க மண்டப கண்ணாடிகளும், சுவர்களும் துப்பாக்கிக் குண்டுகளினால் சேதமடைந்தன.

## வானத் தாக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டேட்டேன்.

காலை 9-15 மணிக்கும் 9-30 மணிக்கும் இடையில் வானத் தாக்குதல் வாபஸ் பெறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அவ்வாறு செய்யப்படாதது கண்டு, பலாலியில் தங்கி நின்ற கண்காணிப்புக் குழுவினரிடம் யாழ்ப்பாணத்தில் நடந்த விஷயங்களை எடுத்துரைத்தேன்.

விசாரணைகளை நடத்தக் கூடிய சூழ்நிலையோ அல்லது நான் பலாலிக்குச் செல்லக்கூடிய சூழ்நிலையோ இல்லை என்று அவர்களுக்கு எடுத்துரைத்தேன்.

நகரில் நிலைமை பதற்றமாக இருக்கிறபடியால் பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகள், அவர்கள் ஆஜர் செய்ய இருந்த சாட்சிகள் யாழ்ப்பாணம் வரமுடியாதிருந்ததாகவும் கண்காணிப்புக் குழுவுக்கு கூறியுள்ளேன்.

அதன்பின்னர் வேறு மேலிடங்களுடன் தொடர்பு கொண்டு இது போன்ற சம்பவங்களைத் எதிர்க்க நடவடிக்கை தடுக்குமாறும் முறைப்பாடு செய்தேன்.

## யாழ்தேவி தாமதித்து வந்தது

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ்தேவி நேற்று இரண்டரை மணித்தியாலம் தாமதமாக வந்தது.

அதன் காரணமாக பிற்பகல் 3-30 மணிக்கு யாழ்தேவி, யாழ் ரயில் நிலயத்தைவிட்டு கொழும்புநோக்கிப் புறப்பட்டது.

அனுராதபுரம், ஆனையிறவு ஆகிய இடங்களில் வைத்து ஆயுதப்படையினர் நடத்திய சோதனை காரணமாகவே யாழ்தேவி தாமதமாகியது.

திங்கள் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படுவதால், 1500க்கு மேற்பட்ட பயணிகள் யாழ்தேவியில் சென்றனர்.

அவர்களில் பெரும்பாலோர் ஆசிரியர்கள்.

## மோட்டார் சைக்கிள்கள் திருப்பி ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

நேற்றுக் காலை இடம்பெற்ற களேபரத்தில் யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து கடத்தப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்கள் சில மணி நேரங்களின் பின்னர் உரியவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டன.

## முனீஸ்வரன்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றது.

யாழ் பஸ் நிலயத்தில் நின்ற பஸ் ஒன்றையே இனந் தெரியாதவர்கள் எடுத்துக்கொண்டு போய் வீதிக்குக் குறுக்கே நிறுத்தினர்.

இவ்வீதியால் வந்த துப்பாக்கிக் குண்டுகள் சில கடைகளையும் தாக்கிச் சேதம் விளைவித்தன.

ஸ்ருடியோ டில்கா
சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்துக்கொள்ள
**Studio Dilkah**
(பஸ்நிலய எதிர் மேல் மாடி)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24174

## விளையாட்டரங்கு

மூன்ருவது டெஸ்ட்

# ஆஸி அணி பதிலடி

## இந்திய பந்து வீச்சாளர் திணறல்

### ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடையும்?

சிட்னி, ஜன. 5

இந்திய அணிக்கு ஆஸி அணி நேற்று பதிலடி கொடுத்தது.

மூன்ருவது கிரிக்கெட் டெஸ்ட்டில் இந்திய அணியின் 600 ஓட்டங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் ஆஸி அணி விக்கட் இழப்பின்றி 169 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த ஆட்டம் வெற்றி தோல்வியின்றி "டிராவில்" முடிவடையும் நிலையைநோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

முதல் இரண்டு டெஸ்ட்களும் வெற்றி தோல்வியின்றி முடிந்தது தெரிந்ததே.

மூன்ருவது டெஸ்ட்டும் வெற்றி தோல்வியின்றி முடியுமேயாகுல், இந்த டெஸ்ட் தொடரும் வெற்றி தோல்வியின்றி முடிந்துவிடும்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூன்ருவது டெஸ்ட்டில் இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் விக்கட் இழப்பின்றி 4 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஆஸி அணி நேற்று தனது ஆட்டத்தை தொடர்ந்தது.

நேற்று ஆஸி வீரர்கள் தமது துடுப்பாட்டத்தை தடுப்பு ஆட்டமாக விளையாடினர்கள்.

ஆஸி வீரர்களின் விக்கெட்டுகளைச் சரித்து வீழ்த்தி ஆட்டத்தில் தமது நிலையை ஸ்திரப்படுத்த இந்திய பந்து வீச்சாளர்கள் எடுத்த முயற்சிகள் பலனற்றுப் போயின.

நேற்றைய ஆட்டத்தில் இந்திய பந்து வீச்சாளர்கள் கோட்டை விட்டனர் என்றே கூறலாம். ஆஸி அணியின் ஒரு விக்கெட்டைத்தானும் அவர்களினுல் விழ்த்த முடியவில்லை.

இதேவேளை நேற்றைய ஆட்டமும் வழமைக்கு ஒன்றரை மணி நேரம் முன்னதாக தடைப்பட்டு விட்டது. தொடர்ந்து பெய்த மழை இதற்குக் காரணம்.

நடைபெற்ற மூன்று நாள் ஆட்டங்களிலும் மொத்தம் 4 விக்கெட்டுக்கள் மட்டுமே வீழ்த்தப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மூன்ருவது டெஸ்ட்டின் நான்காம் நாள் ஆட்டம் இன்று தொடர்ந்து நடைபெறும்.

## இன்று விளையாட்டு போட்டி

சுன்னுகம், ஜன. 5

இன்று சுன்னுகம் புனித அந்தோனியர் இளைஞர் மன்றத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நடைபெறுகிறது

சுன்னுகம் புனித அந்தோனியார் ஆலய முன்றல் வண. யோசப் அடிகளார் அரங்கில் இன்று காலை 9 மணிக்கு பங்குத்தந்தை அருட் திரு. எட்மன் மைக்கல் அடிகள் அவர்கள் கொடியேற்றி போட்டியை ஆரம்பித்து வைப்பார்.

பிரதம விருந்தினராக அருட்திரு இ. யோசப் அடிகள் கலந்து கொள்கிறார்.

கடந்த மாதம்

## மட்டக்களப்பில் 20 பேர் சுட்டுக்கொலை

### சயனைட் அருந்திய ஆறு போராளிகள்

மட்டக்களப்பு. ஜன 5

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மாதத்தில் சுமார் 20 பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகியுள்ளார்கள். இவர்களில் ஆயுதப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியாகிய 11 பேரும் மின் கம்பத் தண்டனை பெற்ற 7 பேரும் அடங்குகிறார்கள்.

ஆயுதப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானோர் விவரம் வருமாறு:-

1 ஆம் திகதி கல்லடிச் சம்பவத்தில் டாக்டர் உட்பட 6 பேர்.

15 ஆம் திகதி தேவபுரத்திலும் 24 ஆம்திகதி சித்தாண்டியிலும் 19 ஆம் திகதி நாவற்குடாவிலும் 27 ஆம் திகதி சித்தாண்டியிலும் 29 ஆம் திகதி ஏருவூரிலும் தலா ஒருவர் பலியாகியுள்ளனர்.

மின் கம்ப மரண தண்டனை பெற்றவர்களில் இரு பெண்மணிகளுடன் அப்பெண்மணிகளில் ஒருவரின் மகனும் அடங்குகின்றார். அவர்களின் விவரம் வருமாறு:-

4-ம் திகதி ஆரையம்பதி ஆஸ்பத்திரியடியில் ஒருவர். 26-ம் திகதி புகையிரதச் சந்தியில் இருவர். 27-ம் திகதி சத்துருக்கொண்டானில் ஒருவர், 28-ம் திகதி ஞானசூரியம் சதுக்கத்தில் பெண்மணி ஒருவர், செங்கலடிச் சந்தியில் தாயும், 30-ம் திகதி அதே இடத்தில் அவரது மகனுக்கு மின் கம்ப தண்டனைக்கு உள்ளானுர்கள்.

அதே நேரம் 21 திகதி கொடுவாமடுவிலும், 30ம் திகதி வாகரையிலும் தலா ஒருவர் மர்மமான முறையில் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்கள்.

இது இவ்வாறிருக்க 2ம் திகதி பார் வீதியிலும் 19ம் திகதி காத்தான் குடியிலும் தலா ஒருவரும், 15ம் திகதி ஒந்தாச்சிமடத்திலும், 17ம் திகதி காத்தான் குடியிலும் தலா இருவருமாக 6 போராளிகள் சயனைட் அருந்தி இறந்துள்ளார்கள்.

## கிழக்கில் மற்றொரு கூட்டு முகாம்?

மட்டக்களப்பு, ஜன.5

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதப் படையினரின் கூட்டு நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் நோக்குடன் கூட்டுமுகாமொன்று அமைக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருமலை ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே கூட்டு முகாம்கள் செயல்பட்டு வருவது தெரிந்ததே.

மட்டக்களப்பில் அதிகரித்து வரும் தீவிரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்பு படையினர் கூட்டாகச் செயற்பட வேண்டும் என பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றன.

வடக்கு, கிழக்கில் உள்ளது போன்று மட்டக்களப்பிலும் புதிய கூட்டு முகாம் ஒன்றை அமைக்கும் பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இந்த முகாம் விமானப்படை தளத்தில் விமானப்படை, இராணுவம், பொலிஸ், அதிரடிப்படை ஆகியவற்றை உள்ளடக்கியதாக செயல்படுமெனவும் தெரியவருகின்றது.

## மயிரிழையில் உயிர் தப்பினர்

யாழ்ப்பாணம், டிச. 5

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் யாழ் பிரஜைகள் இணைப்புக் குழுவின் முக்கிய பிரமுகரான தொழில் அதிபர் திரு. ஆர். ஜே. குணரத்தினம் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுக் காலை ரிம்மர் மண்டபத்தில் கைத்தொழில் சம்மேளனக் கூட்டம் ஒன்று நடைபெறுவதாக இருந்தது.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுவதற்காக தொழில் அதிபர் திரு. குணரத்தினம் கார் ஒன்றில் வந்தார்.

கார் ரிம்மர் மண்டபம் அருகே வந்ததும் துப்பாக்கிச் சூடுகள் வரத் தொடங்கின. காரில் இருந்து இறங்கி திரு. குணரத்தினம் ரிம்மர் மண்டபத்திற்குள் சென்றுவிட்டார்.

அதன் பின்னர் வந்த துப்பாக்கிக் குண்டுகள் திரு. குணரத்தினம் வந்த காரைத் தாக்கின.

இதனுல் காரின் முன் பக்கக் கண்ணாடிகள் நொருங்கின.

யாழ் பிரஜைகள் குழு, யாழ் பிரஜைகள் இணைப்புக் குழு ஆகியவற்றில் திரு. குணரத்தினம் முக்கிய பிரமுகராக இருக்கின்றார்.

### ராஜீவின் கருத்தை ஆராயவில்லை

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இந்தியத் தோட்டத் தொழிலாளர் தாயகம் திரும்பும் விஷயம் பற்றி விடுத்த அறிக்கை அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை.

இப்படி அமைச்சரவைப் பேச்சாளரும் ராஜாங்க அமைச்சருமான டாக்டர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ்சொன்னுர்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலய வீதி, யாழ்ப்பாணம், வெளியிட்ட திகதி 05-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org